**மண்புழுவின் மரணமும் மானுடமும்** **த.ஜெயசீலன்.**

ஈழத்தின் வடமராட்சி அல்வாயில் பிறந்து அங்கே தவழ்ந்து திரிந்து விரும்பியோ விரும்பாமலோ அம் மண்ணின் நினைவுகளோடு பிரான்ஸ் மண்ணின் பனிநிலத்தில் வாழந்து கொண்டிருக்கும் **அல்வையூர் தாசனின் 'மண்புழுவின் மரணம்'** என்னும் கவிதை நூல் பிரான்சில் வெளிவருவது மகிழ்ச்சி தருகிறது.

ஈழத்தின் கவிதை வரலாற்றில் தொண்ணூறுகளுக்குப் பின் தவிர்க்க முடியாததாகி விட்ட புலம்பெயர் கவிதைகளின் தொடர்ச்சியாக இந்நூல் வெளிவருவதும் ஒரு புலம்பெயர் ஈழத்தவனின் கவிதை நூலுக்கு முதல் முறையாக நான் நிலத்திலிருந்து அணிந்துரை வழங்குவதும் நெகிழ்ச்சியைத் தருகிறது.

இன்றைய ஈழத்துக் கவிதைகளில் ஒரு அங்கமாகிவிட்ட புலம்பெயர் கவிதைகள் பற்றி பல ஆய்வுகளும் வாதப் பிரதி வாதங்களும் தொடர்ந்த வண்ணமுள்ளன. பல புலம்பெயர் கவிஞர்களின் படைப்புகளும் பல கவிதை நூல்களும் கவிதையுடன் தொடர்புடைய சில நூல்களும் இதுவரை வெளிவந்திருக்கின்றன. புலம்பெயர்ந்த ஈழக் கவிஞர்களுடைய வரலாறும் பல விமர்சனங்களுக்கிடையே எழுதப்பட்டுக் கொண்டிருக்கிறது.

ஈழப் புலம்பெயர் கவிஞர்களின் ஆரம்பகர்த்தாக்கள் யார்? அவர்தம் கவிதைகளின் வடிவம் பாடு பொருள் செல்நெறி என்ன? என்பன பற்றி பல்வேறு பிரயோசமான கலந்துரையாடல்கள் ஈழத்திலும் புலத்திலும் தொடந்து நடந்த வண்ணமுள்ளன. ஈழத் தமிழ்க் கவிதை என்னும் மாநதியில் தவிர்க்க முடியாத கிளைநதி புலம் பெயர் கவிதைகள் என்பதை இன்று அனேகமாக எல்லோருமே (தமிழகத்திலும்) ஏற்றிருக்கிறார்கள். ஒப்பீட்டளவில் கடந்த காலத்தில் நெருக்கடியான பல சந்தர்ப்பங்களில் நிலத்தை விட புலத்தில் மிக அதிகமாகவும் உயிர்ப்பாகவும் சர்ச்சைகளுடனும் கவிதை முயற்சிகள் நடைபெற்றுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

சுமார் பத்து இலட்சத்துக்கு மேற்பட்ட ஈழத் தமிழர்கள் புலம்பெயர்ந்திருப்பதும், அவர்கள் பல்வேறு நாடுகளில் பரந்து வாழ்ந்து வருவதும், அந்த அந்த நாடுகளின் கலாசார பின்னணியும், அங்குள்ளோரின் சுமார் மூன்று தலைமுறை கடந்த அனுபவங்களும், அவர்கள் சந்தித்த நன்மை தீமைகளும், அவர்களின் நவீன நாகரிக அறிவும், அவர்களுக்கு கிடைத்த பாராட்டுகளும் புறக்கணிப்புகளும், இவை தாண்டி ஈழத்தில் இன்று வரை கிட்டாத பாதுகாப்பும், கருத்தை சுதந்திரமாக கூறக்கூடிய சூழலும், கொஞ்சம் கொஞ்சமாக மங்கிக் கொண்டிருக்கும் மறந்து கொண்டிருக்கும் தாய்நிலம் பற்றிய நினைவுகளும், இடைக்கிடை நிலம் வந்து திரும்பிய பின் புதுப்பித்துக் கொண்ட இன்றைய தாய்நிலம் பற்றிய நினைவுகளும், புலத்திலுள்ள மிக மிக நெருக்கடியான நின்று நிதானிக்க நேரமே இல்லாத நிலைமைகளும், எதிர்காலம் பற்றிய கவலைகளும், தமது சந்ததியின் வருங்காலம்

பற்றிய கரிசனைகளும், இடைக்கிடை மனதிலும் செயலிலும் நினைவேந்தல்களின் போதும் தோன்றி மறையும் முடிந்து போன ஈழயுத்தம் பற்றிய கவலைகளும், இவ்யுத்தம் மற்றும் யுத்தப் பங்காளிகள் பற்றிய நேர் எதிர் மறையான கறாரான விமர்சனங்களும் என்ற இயல்புகளுடன் புலம் பெயர் இலக்கியம் சென்று கொண்டிருக்கும் இந்தப் பொழுதில் இச்சாரங்கள் அனைத்தையும் உள்வாங்கியதாகவே புலம்பெயர் கவிதைகளும் அமைகின்றன.

ஆரம்பத்தில் ஈழத்தில் இருந்து புலம்பெயர்த ஈழத்தில் புகழ் பெற்றிருந்த கவிஞர்களான சேரன், வ.ஐ.ச. ஜெயபாலன், கி.பி. அரவிந்தன், செழியன், நட்சத்திரன், ஔவை, ஊர்வசி, ஆழியாள் போன்றோரினால் புலத்தில் முன்னெடுக்கப் பட்ட ஈழத் தமிழ்க் கவிதை முயற்சி இரண்டு மூன்று தலைமுறைகள் கடந்து இளையவர்களான அல்வையூர் தாசன் போன்றோரால் தற்போது முன்கொண்டு செல்லப் படுகிறது.

புலத்தில் வெளிவரும் தமிழ் சஞ்சிகைகளும் வானொலி போன்ற ஊடகங்களும் முகநூல் இணையத்தளங்கள் போன்றவையும் இன்று வரையான கவிதை முயற்சிகளுக்கு காத்திரமான பங்களிப்பு செலுத்தி வருவதைக் காண முடிகிறது. எனினும் அண்மைக் காலத்தைய புனைவு இலக்கியம், பத்தி எழுத்துக்கள், யுத்தத்திற்குப் பின்னான யுத்தம் பற்றிப் பேசும் பெரு நாவல்கள் சிறுகதைகளுடன் ஒப்பிடும் போது தற்போதைய புலம்பெயர் தமிழ்க் கவிதை முயற்சி சற்று பின்தங்கியிருப்பதாகவே உணர முடிகிறது. இந்த அடிப்படையில் அல்வையூர் தாசனின் முயற்சி நம்பிக்கை தருவதாக அமைவதோடு பாராட்டத் தக்கதாகவும் உள்ளது.

'ஒரு மண்புழுவின் மரணம்' புதுக்கவிதைகளால் ஆனது. அதிகம் தன்னுணர்ச்சி வெளிப்பாடுகளாக வெளிப்படுவது. அனேகமாக நேரடித் தன்மையுடன் ஆகக் கூடுதலான சோடனைகள் அலங்காரங்கள் அற்று ஜொலிப்பது. நல்ல புதுக்கவிதைகளுக்கான பல அம்சங்களை உள்ளடக்கியிருப்பது. ஈரலிப்பான மண்ணோடு ஒட்டி தான் வாழும் மண்ணை வளப்படுத்தி வாழும் மண்புழு ஒரு குறியீடாக எடுத்தாளப் பட்டிருப்பதும் அதன் மரணம் என்ற அதிர்ச்சிச் செய்தியூடாக கவிஞர் சொல்லத் துடிப்பவைகளும் மிக முக்கியமானவை என்பதோடு நிலத்திலும் புலத்திலும் உள்ள வாழ்வியல் யதார்த்தங்களைக் கோடிட்டுக் காட்டுவதாயும் அமைகின்றது.

தனது முதல் கவிதையையே யாரும் தொடங்க நினைக்காத தலைப்பில் 'இவ்வளவு தான் வாழ்க்கை' என

**"போரிட நேர்ந்தால்**

**பூக்கள் கூட**

**உதிரம் குடிக்கும்**

**புன்னகைத்துப் பார்த்தால்**

**வெந்தணலும் தணிந்து போகும்”** என்றும்

**“ஆழம் அறிந்து**

**காலை விடுதல்**

**இலக்குத் தெரிந்து**

**பாதை வகுத்தல்**

**இதுதான்**

**ஆதித்தமிழன் வரலாறு**

**அது புரிந்து**

**வாழ்வை நடத்து**

**வழிகள் பிறக்கும் பலநூறு”** என்று அலட்சியமாக அதிராமல் கடந்து போகிறார்.

அடுத்து ஒரு காதல் கவிதையில்

**“யார் சொன்னது**

**காதல் அபத்தமென்று…**

**ஒரு மரத்தை**

**ஒரு நிழலை**

**ஒரு வேரை**

**ஒரு விழுதை**

**உருவாக்கி விட்டுப் போகும்**

**காதலை**

**கண்ணில்லாதவர்கள்**

**அப்படித்தான் சொல்லக் கூடும்”** என்றும்,

**“இதயத்தில்**

**தூண்டில் எறிந்து**

**காதல் கடலுக்குள்**

**இறக்கிவிடச் சொல்**

**மூழ்கி எழுந்து வரும்போது**

**பூமி எங்கும் காதல் பூக்கள்**

**பூக்கட்டும்"** என்றும் உருகுகிறார்.

'தங்கைகளின் உலகம்' இப்படி இருக்கிறது இவருக்கு

**"அதுவரை**

**அம்மாவின் கையிலிருந்த**

**அதிகாரம்**

**தங்கை கைக்கு**

**இடம்மாறியதில்**

**ஆட்சிக் கவிழ்ப்புப் பற்றி**

**அலட்டிக் கொள்ளாமல் இருந்தாள்**

**முதல் முறையாக அம்மா....**"என்றும்

**அவள்**

**எங்கள் உலகத்தின்**

**முடி சூடா இராணி**

**தாலிகட்டிப் போகும் வரை"** என்றும் பாசத்தில பனிக்க வைக்கிறார்.

'சுயம் உணர்வதற்காய்' எனும் கவிதையில்

**"பிரித்தெடுக்க முடியாத**

**ஆசைவலைகளை**

**அறுத்தெடுக்கும் முயற்சியில்**

**தொடர்ந்து தோற்றுப் போகிறேன்...."**என்றும்,

**“அருவம் உருவம் அற்ற**

**தெய்வங்களைத் தேடி**

**கோவில்களுக்குப் போனபோது தான்**

**பிடித்திருக்க வேண்டும் மதம்”** என்றும்,

**“அறிவு சார் துறைகளிலும்**

**அரசாங்க நிலைகளிலும்**

**பின் கதவால்வந்து ‘சாதி’**

**முன் கதவைச் சாத்திவிட்டுப் போகும்**”என்றும் குமுறுகிறார்.

‘எழுத வேண்டும் கவிதை’ என்பது

**“விழுந்தவரும்**

**தானாய்**

**எழுந்துவர**

**நம்பிக்கை விதை தூவி**

**எழுத வேண்டும் ஒரு கவிதை”** என்றும்

**“யுத்தம் தின்று விட்டு**

**மிச்சம் வைத்தவரை**

**கண்காணக் காயமும்**

**மனங் காணக் காயமும்**

**மாயமாய் ஆகும் வரை**

**அவர் மனதை ஆற்றிட**

**எழுத வேண்டும் ஒரு கவிதை”** என்றும்,

**“பேனா முனையில்**

**தீக்குச்சி ஏந்தி**

**இருண்டு கிடக்கும்**

**தேசமெங்கும் விடியும் வரை**

**வெளிச்சம் பரப்பி**

**எழுத வேண்டும் ஒரு கவிதை”** என்றும்

**“என்மொழிபோல**

**எங்கினும் இல்லை**

**உலகே தமிழ்தான்**

**உனக்கு முதற்பிள்ளை**

**என உரக்கக் கூறி**

**எழுத வேண்டும் ஒரு கவிதை”** என்றும் பொங்குகிறார்.

‘எப்போது எப்போது’ எனப் பலரிடம் பலதைக் கேட்கும் கவிஞர்

**“வேங்கைக் கூட்டமொன்றில்**

**பந்தி விரித்துப் படுத்திருக்கும் நரியினங்களை**

**நாடி பிடித்தறிவது எப்போது”** என்றும்,

**“சாதி சாதி என்ற**

**அகிறிணை அறுத்து**

**சாதி சாதி என்று தட்டிக் கொடுத்து**

**உயர்திணை ஆவதெப்போது”** என்றும் கேட்டு வைக்கிறார்.

புலம்பெயர்து தன் சுகம் விருப்பு வெறுப்பு விட்டு இயந்திரங்களாகி ஊருக்கு உழைத்து அனுப்பிக் களைக்கும் அனேகமான இளைஞர்களின் குரலை

**“பிரச்சனைகள் முடியட்டும்**

**கல்யாணம் செய்யலாம் என்றால்**

**வயது பிரச்சினையாகும்**

**புலத்தில் இன்னுமொரு**

**முதிர் காளையை உருவாக்கிவிட்டு**

**காலம் நகர்ந்து போகும்"** எனும் வரிகளில் கேட்க முடிகிறது.

**"திறக்காத சிப்பிக்குள்**

**ஒருசேர முத்துக்களாய்**

**ஆழ்கடலில் குதிப்போமா"** என்ற வரிகளில் நவீன கவிதை உத்திகளிலொன்றான முரணையும் காண முடிகின்றது.

'நடுத்தெருவில் நிற்பது

நாயல்ல தாயடா' வில்

**"உன் அப்பன் இருக்கும் வரை**

**நிமிர்ந்த தலை குனியலையே**

**அவர் எப்ப போனாரோ**

**இன்னும் குனிந்த தலை நிமிரலையே"** என்றும்,

**"குந்தக் கூட இடந்தராத நீ**

**எனக்கு கோவில் கட்டுவேன் என்றாய்**

**உன்னை மகனாக பெற்ற (பிர) சவ வலி**

**இப்பத் தாண்டா தெரியுது"** என்றும் இன்றைய 'பாச யதார்த்தம்' கண்டு கொதிக்கிறார்.

ஒரு காதல் நவீனமாக விரியும் 'பால்குடித்த பூனை' கவிஞரின் நவீன சொல்லாட்சியையும் புதுக் கவிதா விலாசத்தையும் தனித்துவத்தையும் காட்டி நிற்கிறது.

'பாலியற் கல்வி பள்ளியிற் தேவை' என்று சமூக சிந்தனையுடன்

**“இயற்கை**

**உடலிற்கும்**

**உணவிற்கும்**

**ஆங்காங்கே**

**வைத்திருக்கிறது**

**பொறி**

**அதில்**

**விழுந்து**

**எழுந்து**

**வழி சேர்வதில் தான்**

**வெற்றி பெறுகிறது**

**ஐம்புலன்களின் குறி...**

**கடலை மறைப்பதும்**

**காமத்தைத் துறப்பதும்**

**மாபெரும் காரியம்...**

**பரந்து விரிந்த**

**அறிதல் தேவை**

**கலவி பற்றிய கல்வி**

**பள்ளியில் தேவை”** என்கிறார்.

‘தனிமையின் உக்கிரம்’

**“முதுகுக்குப் பின்**

**யாரோ வருவதும்**

**துரோகத்தின் மொழியால்**

**தட்டிக் கொடுப்பதும்**

**மூக்கின் வெளியே**

**வலிந்து வெளியேறும் பெருமூச்சு**

**அனலின்றித் தணலாவதும்**

**தடையின்றி நிகழ்ந்தேறும்"** என்கிறார்.

கவிஞர்களின் கவிதை பற்றிய வழமையான எடுத்துரைப்பாக

**"ஆழம் நீயடி**

**மூழ்க நானடி**

**காலம் முழுக்க**

**உன்னில் கரையும்**

**திரவம் நானடி....**

**போதும் போதும் எனவும்**

**போதை தா**

**போகா இடத்திற்கும் ஒரு**

**பாதை தா"** எனவும் எதுகை மோனை சந்தங்களோடும் வரும் இவர்

**"ஊமையாகிப் போன என்**

**தேசத்தின் குரல்களை**

**உலகறிய ஊதவேண்டும்**

**தந்துவிடு உன் புல்லாங்குழல்களை"** எனவும்,

**"சிறைகளில் உள்ள**

**இன்னும் சிரிக்காத முகங்கள்**

**பொய்களின் சாட்சிகளால்**

**பூட்டப் பட்ட விலங்குகள்**

**விடுதலை பெறவேண்டும்**

**பறையோடு வாடி - நான்**

**பறைசாற்ற வேண்டும்”** எனவும் முழங்கி சிறிது அரசியலும் பேசுகிறார்.

கவிஞருக்கு ‘புத்தகம் ஒரு போதிமரம்’ ஆகும் கற்பனை நம்மை வியக்க வைக்கிறது.

**“தொடத் தொட**

**ஓடும் மேகமாய்**

**மூழ்க மூழ்க**

**ஆழிப் பெருங்கடலாய்**

**விழிக்கும் கணத்தில்**

**விடியலின் முதல் வரவாய்**

**உறங்கும் போதும்**

**தலையணைக் கடியில்**

**உறவின் தொடராய்**

**இருந்தால் போதும்**

**நீ எனக்கு**

**புத்தகமே**

**நீயும் ஒரு போ(தை)திமரம் தான்**

**இன்னொரு புத்தனாய்**

**உன்னோடு நான்”** என்கிறது இவரின் இனிய கற்பனை செறிந்த புதுமையான

கவிப்பிரகடனம்.

இவ்வாறு பலவற்றை அவாவி வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த மண்புழுவின் வாழ்வினது சாரமானது

**“தாலாட்டத் தாய்**

**அதட்டி வைக்க மனைவி**

**வாழக் காதல்**

**இயற்கையாய்ச் சாதல்**

**இன்பம் கொஞ்சம்**

**துன்பம் கொஞ்சம்**

**நஞ்சு இல்லா நெஞ்சம்**

**நோகடிக்கா மனது**

**கிடைத்தால் சுகம் தான்"** என்று தெளிவு கண்டும் சிலிர்க்கிறது!

ஆயிரம் ஆயிரம் ஏக்கக் கனவுகளோடு ஈரம் கசிகின்ற நெகிழ்ந்து குழையும் செம்பாட்டு மண்ணிலிருந்து புலம் பெயர்ந்து இறுகி விறைத்துக் கிடக்கின்ற குளிர்ப்பனி தேசத்தில் சிரமப்பட்டுச் சீவித்துக் கொண்டிருக்கின்ற இவர்போன்ற மண்புழுக்களின் மரணம் நேர்ந்துவிடக் கூடாது என நிலத்திலு் புலத்திலும் உள்ள எல்லாக் கடவுள்களையும் நேர்கிறது எனது மனது.

06.06.2018